CAMBRIDGE
International Education

# Cambridge O Level

CANDIDATE NAME

CENTRE NUMBER

CANDIDATE NUMBER

*0123456789*

**TAMIL** **3206/02**

Paper 2 Reading and Translation **For examination from 2028**

SPECIMEN PAPER **1 hour 45 minutes**

You must answer on the question paper.

No additional materials are needed.

**INSTRUCTIONS**
- Answer **all** questions.
- Use a black or dark blue pen.
- Write your name, centre number and candidate number in the boxes at the top of the page.
- Write your answer to each question in the space provided.
- Do **not** use an erasable pen. Do **not** use correction fluid or tape.
- Do **not** write on any bar codes.

**INFORMATION**
- The total mark for this paper is 50.
- The number of marks for each question or part question is shown in brackets [ ].

| For Examiner's Use | |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| Total | |

This document has **12** pages. Any blank pages are indicated.

© Cambridge University Press & Assessment 2028

**1** Read the text. For each question, tick (✓) the box to show the correct answer.

என்னிடம் ஒரு செய்தி உள்ளது: நாங்கள் ஒரு புதிய வீடு வாங்க முடிவு செய்துள்ளோம்! நான் மட்டும் இப்போது எங்கள் பெற்றோர்களுடன் வசித்து வருகிறேன். ஏனென்றால் எனது அண்ணன் ஐம்பது கிலோமீட்டர் தொலைவில் உள்ள தலைநகருக்கு வேலைக்குச் சென்றுவிட்டார். நகரத்தின் மையத்தில் உள்ள எங்கள் அடுக்கு மாடி வீட்டில் இப்போது எங்களுக்கு தேவையில்லாத அறைகள் உள்ளன நாங்கள் நகரத்திற்கு வெளியே ஒரு சிறிய வீட்டைத் தேடுகிறோம். அம்மா புதிய வீட்டில் வாகனம் நிறுத்தும் இடமும் மற்றும் ஒரு சிறிய தோட்டமும் இருக்க வேண்டும் என்று கூறுகிறார். எங்களுக்கு வெளியே புல்தரையில் உட்கார இடம் வேண்டும்.மேலும் என்னவென்றால், இறுதியாக என்னால் ஒரு பூனையை வளர்க்க முடியும் ஆனால் இது ஒரேயொரு முன் பாகம் மட்டுமே உள்ள அடுக்கு மாடி வீட்டில் கடினம். என் பெற்றோர் என் பாட்டியின் அருகில் வாழ விரும்புகிறார்கள், சில நேரங்களில் அவருக்கு உதவி தேவைப்படுகிறது. அவர் எண்பது வயதை கடந்துவிட்டார்! நேற்று அம்மா செய்தித்தாளில் கண்ட ஒரு வீட்டைப் பார்க்க நான் அம்மாவுடன் சென்றேன். அது மிகவும் நன்றாக இருக்கிறது என்று நான் நினைத்தேன், ஆனால் அம்மா அங்குள்ள சாலை மிகவும் பரபரப்பாக இருப்பதாகக் கூறினார். இருப்பினும் அவர் புதிதாகப் புதுப்பிக்கப்பட்ட குளியலறையை விரும்பினார்.

இப்படிக்கு லூசியா

**(a)** லூசியாவின் அண்ணன் ... வாழ்கிறார்.

**A** அவர்கள் பெற்றோர்களினுடைய வீட்டில் ☐

**B** வேறொரு நகரத்தில் ☐

**C** வெளிநாட்டில் ☐

[1]

**(b)** இப்போது லூசியா வாழும் அடுக்குமாடி வீடு ...

**A** குடும்பத்துக்கு மிகப் பெரிதாக இருக்கிறது. ☐

**B** சிலவேளைகளில் மிகச் சத்தமாக இருக்கிறது. ☐

**C** நகரத்தின் மையத்திலிருந்து தூரத்தில் உள்ளது. ☐

[1]

**(c)** ... வீட்டை லூசியாவின் அம்மா விரும்புகிறார்.

**A** தனது வேலையை வீட்டிலிருந்து செய்ய வசதி உள்ள ☐

**B** வண்டி நிறுத்தும் இடம் உள்ள ☐

**C** காய்கறிகளை வளர்க்கும் தோட்டம் உள்ள ☐

[1]

**(d)** லூசியா தனது தோட்டத்தில் ... முடியும்.

**A** புல்லை வெட்ட ☐

**B** இளைப்பாற ☐

**C** விளையாட ☐

[1]

**(e)** புதிய வீட்டில் லூசியா ... வைத்துக்கொள்ள விரும்புகிறாள்.

**A** ஒரு பூனையை ☐

**B** மாடியின் முன் பாகத்தை ☐

**C** படிக்கும் அறையை ☐

[1]

**(f)** லூசியாவின் பாட்டி ...

**A** அவளது பெற்றோருக்கு உதவுகிறார். ☐

**B** தோட்டம் அமைக்க விரும்புகிறார். ☐

**C** மிகவும் வயதானவர். ☐

[1]

**(g)** அவர்கள் நேற்று பார்த்த வீட்டைத் தேடிக் கண்டுபிடித்தது யார்?

**A** லூசியாவின் பாட்டி ☐

**B** லூசியாவின் தாய் ☐

**C** லூசியாவின் தந்தை ☐

[1]

**(h)** லூசியாவின் அம்மாவின் கருத்துப்படி அவர்கள் நேற்றுப் பார்த்த வீடு ...

**A** மிகவும் சத்தம் நிறைந்தது. ☐

**B** திருத்த வேலைகள் உள்ளது. ☐

**C** விலை உயர்ந்தது. ☐

[1]

[மொத்தம்: 8]

Turn over

**2** Read the text. Answer the following questions in **Tamil**.

நீங்கள் ஒரு தொழில் சார்ந்த விளையாட்டுப் புகைப்படக் கலைஞராக இருக்க விரும்புகிறீர்களா? இது ஒரு கனவு வேலையாகத் தெரிந்தாலும் அதைச் செய்பவர்கள் இது மிகவும் கடினமானது என்று கூறுகிறார்கள். நிச்சயமாக, இந்தத் தொழில் உலகம் முழுவதும் பயணம் செய்யவும் மற்றும் பெரிய விளையாட்டு நிகழ்வுக்கு செல்லவும் உங்களை அனுமதிக்கிறது. ஆனால் தொடர்ச்சியான பயணங்களால் சோர்வு மிக்க வேலையாக இருக்கிறது. அத்துடன், உங்கள் படங்களை வாங்கும் நிறுவனங்கள் ஒவ்வொரு முறையும் மிகச் சிறந்த புகைப்படத்தை உங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றன.

ஒரு முக்கியமான விளையாட்டுப் போட்டியின் போது விளையாட்டு புகைப்படக் கலைஞர்களுக்கு இடையிலான போட்டி மிகவும் கடுமையாக இருக்கும். இருப்பினும், அவர்கள் அரங்கத்தை விட்டு வெளியேறியவுடன், அவர்கள் அனைவரும் ஒருவரோடு ஒருவர் நட்பாக இருந்து ஒருவருக்கொருவர் ஆதரவாக இருப்பார்கள். விளையாட்டுப் புகைப்படம் எடுக்கும் துறையில் ஈடுபடுவது கடினம். பெரும்பாலான பெரிய விளையாட்டு நிகழ்வுகளில், பிரபலமான புகைப்படக் கலைஞர்கள் மட்டுமே அமைப்பாளர்களிடமிருந்து நுழைவுச் சீட்டை சுலபமாக பெற முடியும். இதன் அர்த்தம் வாய்ப்புகள் இல்லை என்பதல்ல – புதியவர்கள் விடாமுயற்சியுடன் அதிர்ஷ்டசாலியாக இருந்தால் போதும்!

தொடக்கத்தில், ஒரு விளையாட்டுப் புகைப்படக் கலைஞர் ஒரு வாய்ப்பு வரும் வரை மிகக் குறைந்த பணம் சம்பாதிக்கிறார். ஒரு நாள் நீங்கள் சரியான இடத்தில் சரியான நேரத்தில் பல வருடங்களுக்கு விற்பனையாகும் ஒரு சரியான புகைப்படத்தை எடுக்கலாம். இது புகைப்படக் கலைஞராக உங்களுக்கு ஒரு நற்பெயரை உருவாக்கும்.

**(a)** தொழில் சார்ந்த புகைப்படக் கலைஞர்கள் தங்கள் தொழிலைப் பற்றி என்ன நினைக்கிறார்கள்?

.................................................................................................................................... [1]

**(b)** ஒரு விளையாட்டு புகைப்படக் கலைஞரின் பங்கைப் பற்றி எழுத்தாளர் குறிப்பிடும் நல்ல விடயங்கள் எவை? இரண்டு விவரங்களை எழுதுக.

1 ....................................................................................................................................

2 ....................................................................................................................................

[2]

**(c)** பயணம் செய்வதால் ஏற்படும் தீமை என்ன என்று எழுத்தாளர் கூறுகின்றார்?

.................................................................................................................................... [1]

**(d)** புகைப்படக் கலைஞர்களிடமிருந்து நிறுவனங்கள் எதை விரும்புகின்றன?

.................................................................................................................................... [1]

**(e)** விளையாட்டுப் புகைப்படக் கலைஞர்கள் ஒருவருக்கொருவர் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள்:

**(i)** முக்கியமான விளையாட்டுப் போட்டியின் போது?

........................................................................................................................ [1]

**(ii)** முக்கியமான விளையாட்டுப் போட்டி முடிவடைந்த பின்னர்?

........................................................................................................................ [1]

**(f)** பெரிய விளையாட்டு நிகழ்ச்சிகளின் போது பிரபலமான புகைப்படக் கலைஞர்களுக்கு கிடைக்கும் நன்மை என்ன?

........................................................................................................................ [1]

**(g)** ஆரம்ப நிலை புகைப்படக் கலைஞர்கள் வெற்றிபெற விரும்பினால் என்ன செய்ய வேண்டும்?

........................................................................................................................ [1]

**(h)** ஒரு விளையாட்டுப் புகைப்படக் கலைஞராகத் தொழில் தொடங்கும்போது எவ்வளவு சம்பாதிக்கலாம் என நீ எதிர்பார்க்கிறாய்?

........................................................................................................................ [1]

**(i)** மிகச் சிறந்த புகைப்படம் எடுப்பதின் நன்மைகள் இரண்டை எழுதவும்.

1 ........................................................................................................................

2 ........................................................................................................................

[2]

[மொத்தம்:12]

Read the following text and then answer **Question 3** and **Question 4** in **Tamil**.

**பரிசளிப்பு விழா**

நான் பள்ளியில் எனக்குக் கிடைத்துள்ள பணியை ஏற்க இன்னும் முடிவு செய்யவில்லை. ஆனால், தலைமை ஆசிரியர் நான் தங்கும் விடுதிக்கு தொலைபேசி மூலமாக அழைத்து, பரிசளிப்பு விழாவிற்கு என்னைத் தனிப்பட்ட முறையில் அழைத்தார். அப்புறம் எப்படி முடியாது என்று நான் அவரிடம் சொல்ல முடியும்? நான் வந்தபோது மாணவர்கள் ஏற்கனவே அங்கு இருந்தனர். இந்த முக்கியமான நிகழ்ச்சிக்கு அவர்கள் பள்ளி மண்டபத்திற்கு வெளியே அமைதியாகவும் பணிவாகவும் தங்கள் சிறந்த ஆடைகளை அணிந்து காத்திருந்தனர். அவர்களின் பெற்றோர் அவர்களைப் பெருமையுடன் பார்த்துக்கொண்டு இருந்தனர்.

ஒரு உயரமான மற்றும் மகிழ்ச்சியான பெண் இசை ஆசிரியரால் பியானோவில் இசைக்கப்பட்ட பள்ளிப் பாடலுடன் பரிசளிப்பு விழா தொடங்கியது. அது ஒரு அழகான பாடல். மற்றும் குழந்தைகள் அதை மகிழ்ச்சியுடன் பாடினர். அடுத்து தேசிய கீதம் இசைக்க குழந்தைகள் நிமிர்ந்து நின்று கொடியைப் பார்த்தனர். அவர்கள் அனைவரும் உற்சாகத்துடனும் இதயங்களில் கைகளை வைத்தும் கண்ணீர் மல்கிப் பாடினர். அதைப் பார்க்க மிகவும்  பிரமிப்பாக இருந்தது. இருப்பினும், இசை ஆசிரியர் பியானோவை மிகவும் சத்தமாக வாசித்தமையால் குழந்தைகள் பாடுவதைக் கேட்பது கடினமாக இருந்தது. இருந்த போதிலும் அந்த அறையில் இருந்த கம்பீரமும் பெருமிதமும் மிகத் தெளிவாக இருந்ததால் நானும் என்னை உயர்வாகக் கருத முடிந்தது.

இசை முடிந்ததும், மூத்த மாணவர்கள் அந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளைப் பற்றி பேசினர். சுற்றுச்சூழல் தினக் கொண்டாட்டங்கள், கால்பந்து போட்டிகள், இசை நிகழ்ச்சிகள், கலை மன்றங்கள், நீச்சல் போட்டிகள் மற்றும் கல்வி சார்ந்த வருகை ஆகியவை இதில் அடங்கும். ஆசிரியர்கள் எவ்வளவு கடினமாக உழைத்தார்கள் என்பதைப் பார்த்து நான் ஆச்சரியப்பட்டேன். அவர்கள் தங்கள் மாணவர்களுக்காக இந்த நடவடிக்கைகள் அனைத்தையும் ஏற்பாடு செய்திருந்தனர்.

அடுத்து, பரிசு வழங்குதல்: ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் சிறந்த மாணவர்கள் எழுந்து நின்று ஒரு சிறிய புத்தகத்தைப் பெற்றனர். இறுதியாக தலைமை ஆசிரியர் அனைவருக்கும் விடுமுறை வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

“ஆ, இன்னும் ஒரு செய்தி  உள்ளது !  திரு பீகாரியை அறிமுகப்படுத்துகிறேன். அவர் எங்களுடன் இருப்பதற்காக பிரான்சிலிருந்து இவ்வளவு தூரம் வந்துள்ளார். அடுத்த தவணை அவர் எங்களுடன் இணைவார் என்று நாங்கள் நம்புகிறோம்" என்றார். அனைவரின் கண்களும் என்னை நோக்கி திரும்பின. “குழந்தைகளே, திரு பீகாரி அடுத்த தவணையில் எங்களுடன் இணைந்து  எங்கள் பள்ளியில் எங்களுக்கு உதவ முடிந்தால் நன்றாக இருக்கும் அல்லவா?" உடனே, அனைத்து குழந்தைகளும் பெற்றோர்களும் உரக்க கைதட்டத் தொடங்கினர். தன் பியானோவை மூடிவிட்டு, இசை ஆசிரியர் திரும்பி என்னைக் கட்டி அணைத்துக்கொண்டார். நான் இந்த வேலையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று உணரத் தொடங்கினேன்.

**3** Answer the following questions in **Tamil**, using your own words as far as possible.

**(a)** பள்ளி நிகழ்ச்சிக்குப் போவதற்கு கதை கூறுபவர் தீர்மானித்ததற்கான காரணம் என்ன? (பத்தி 1).

........................................................................................................................................ [1]

**(b)** மண்டபத்துக்கு வெளியே காத்திருக்கும்போது குழந்தைகள் ஏன் அவ்வளவு நன்றாய் நடந்துகொண்டார்கள்? இரண்டு காரணங்கள் தருக. (பத்தி 1).

1 ........................................................................................................................................

2 ........................................................................................................................................ [2]

**(c)** இந்த விழாவைப் பெற்றோர் மிகக் கவனமாகக் கருத்தில் கொண்டதை எது காட்டியது? (பத்தி 1).

........................................................................................................................................ [1]

**(d)** பள்ளிப் பாடலைப் பாடுவதைப் பற்றி பிள்ளைகள் எப்படி உணர்ந்தார்கள்? (பத்தி 2)

........................................................................................................................................ [1]

**(e)** தேசிய கீதத்தைப் பாடுவதில் குழந்தைகள் பெருமிதம் கொண்டார்கள் என்பதற்கு என்ன காரணங்கள் உள்ளன? மூன்று விவரங்கள் தருக. (பத்தி 2)

1 ........................................................................................................................................

2 ........................................................................................................................................

3 ........................................................................................................................................ [3]

**(f)** தேசிய கீதத்தின் போது இசை ஆசிரியர் எப்படிப்பட்ட ஒரு பிரச்சினையை ஏற்படுத்தினார்? (பத்தி 2)

........................................................................................................................................ [1]

**(g)** எந்த இரண்டு விளையாட்டு நடவடிக்கைகள் நிகழ்ச்சியில் குறிப்பிடப்பட்டன? (பத்தி 3)

1 ........................................................................................................................................

2 ........................................................................................................................................ [2]

© Cambridge University Press & Assessment 2025

**(h)** பள்ளியின் ஆசிரியர்களைப் பற்றி திரு பீகாரி என்ன நினைத்தார்? (பத்தி 3)

........................................................................................................................ [1]

**(i)** தலைமை ஆசிரியரால் குழந்தைகளுக்கு என்ன வழங்கப்பட்டது, ஏன்? இரண்டு விவரங்கள் தருக. (பத்தி 4)

1 ........................................................................................................................

2 ........................................................................................................................
[2]

**(j)** திரு பீகாரி பள்ளிக்கு வந்து வேலை செய்ய வேண்டும் என்ற தமது விருப்பத்தை நிகழ்ச்சியில் இருந்தவர்கள் எவ்வாறு காட்டினார்கள்? (பத்தி 5)

........................................................................................................................ [1]

**(k)** திரு பீகாரியைத் தனக்குப் பிடித்திருக்கிறது என்பதை இசை ஆசிரியை எப்படிக் காட்டினார்? (பத்தி 5)

........................................................................................................................ [1]

[மொத்தம்: 16]

**4** Look at the text for Question 3. Identify the word or phrase in the text which means the same as the underlined words:

**(a)** நான் <u>சென்றபோது</u> (பத்தி 1).

............................................................................................................................................ [1]

**(b)** அது ஒரு <u>இனிமையான இசை</u> (பத்தி 2).

............................................................................................................................................ [1]

**(c)** நான் <u>வியந்தேன்</u> (பத்தி 3).

............................................................................................................................................ [1]

**(d)** <u>எல்லோரும் என்னைப் பார்த்தனர்</u> (பத்தி 5).

............................................................................................................................................ [1]

[மொத்தம்: 4]

**5** Translate the following passage into **English**.

நீங்கள் கலந்துகொள்ளக்கூடிய ஒரு எழுத்துப் போட்டியைப் பற்றி நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் விரும்பும் தலைப்பில் வெறும் ஐந்நூறு வார்த்தைகள் அல்லது அதற்கும் குறைவான வார்த்தைகளில் ஒரு சிறுகதையை எழுத வேண்டும். பிரபல நடிகர்கள் தொலைக்காட்சியில் சிறந்த கதைகளைப் படிப்பார்கள்.

இந்த போட்டிக்கு நீங்கள் எந்த வகையான கதையை எழுதலாம் என்பதற்கு எந்த விதிகளும் இல்லை – அது ஒரு துப்பறியும் கதை, திகில் கதை, நகைச்சுவை கதை அல்லது நீங்கள் விரும்பும் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம்.

நான் உங்களுக்கு ஒரு ஆலோசனை தருகிறேன்: பல வித்தியாசமான கதாபாத்திரங்களைக் கொண்டிருக்காமல் இருப்பது நல்லது, ஏனென்றால் கதையை மக்கள் புரிந்துகொள்வது கடினம்.

நீங்கள் கலந்துகொள்ள விரும்பினால், உங்கள் கதைகளை வெள்ளிக்கிழமைக்குள் என்னிடம் கொடுங்கள்.

Up to 5 marks are available for the content of your answer and up to 5 marks for language.

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

© Cambridge University Press & Assessment 2025 

..........................................................................................................................................

..........................................................................................................................................

.................................................................................................................................... [10]

© Cambridge University Press & Assessment 2025 

**BLANK PAGE**

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (Cambridge University Press & Assessment) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

Cambridge International Education is the name of our awarding body and a part of Cambridge University Press & Assessment, which is a department of the University of Cambridge.

© Cambridge University Press & Assessment 2025 